Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

| | |
|---|---|
| Calendar | **DVC. No.4/2020** |
| Deposition of Sworn Statement | **PW1** |
| Name | : ரஞ்சிதா |
| Father's Name/Husband Name | : மாது |
| Village | : காந்திநகர் |
| Taluk | : பாப்பிரெட்டிபட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.07.2026**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**மனுவின்பேரில் அனுமதிக்கப்பட்டு**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கும் எதிர்மனுதாருக்கும் 17.06.2010 ம் தேதி திருமணம் நடைப்பெற்றது.

நான் 2010 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பு முடித்தேன் என்றால் சரிதான்.

திருமணத்தின் போது நான் 10 ஆம் வகுப்பு முடித்து 11 ம் ஆம் வகுப்பு சேருவதற்காக இருந்தேன். அப்போது எனக்கு 16 வயது ஆகும்.

எனக்கு திருமணம் நடந்தபோது எனது அக்கா திருமணம் ஆகாமல் தான் இருந்தார்.

எனது அக்கா திருமணம் ஆகாதநிலையில் எனக்கு ஏன் திருமணம் செய்து வைத்ததார்கள் என்றால் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து கொடுத்த அழுத்ததின் காரணமாக எனக்கு முதலில் திருமணம் நடந்தது.

நான் திருமணத்தை மறுக்கவில்லையா என்றால் நான் மறுத்தும் பெரியவர்கள் செய்துவைத்தார்கள்.

என் தாய் தந்தையர் கட்டாய திருமணம் செய்து வைக்கவில்லை எனது பெற்றோர்கள் எடுத்து கூறியபிறகு நான் புரிந்துக்கொண்டு திருமணம் செய்துக்கொண்டும்.

எனக்கு திருமணம் 16 வயதில் நடந்ததால் எனக்கு புரிந்துக்கொள்ளும் திறன் இல்லை

என்றால் சரியல்ல.

எனது பெற்றோர்கள் எனது வயதை மறைத்து எதிர்மனுதாரருடன் கட்டாய திருமணம் செய்துவைத்தார்கள் என்றால் சரியல்ல.

எனக்கு திருமணம் நடந்த சமயத்தில் எதிர்மனுதாரர் என்னை நல்லப்படியாகதான் வைத்திருந்தார்.

எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் எதிர்மனுதாரரும் குழந்தைகள் பிறக்கும் வரை நன்றாகதான் பார்த்துக்கொண்டார்கள்.

1ம் எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் எத்தனை வருடங்களாக தொடர்பில் இருந்தார் என்றால் எனக்கு குழந்தை பிறந்ததன் பின்னிட்டு நான்கு ஐந்து வருடமாக தொடர்பில் இருந்தார்.

திருமணம் நடந்து 5,6 வருடங்கள் 1 ம் எதிர்மனுதாரருடன் நல்ல முறையில் தான் வாழ்ந்துவந்தேன்.

நான் என் கணவர் 1 ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் என்னை என் கணவர் என்னை வன்புணர்வு செய்தாரா என்றால் இல்லை.

1ம் எதிர்மனுதாரர் மற்றொரு ஆண் நபருடன் என்னை ஒன்றாக இருக்கும்படி கூறினாரா என்றால் இல்லை, ஆனால் என் கணவர் கடன் பெற்றிருந்த ஒரு ஆண் நபர் என்னிடம் தப்பாக பேசுகிறார் என்று கூறினேன் அதை எல்லாம் கண்டுகாதே என்று எனது கணவர் கூறினார்.

என்னிடம் தவறாக பேசிய அந்த ஆண் நபர் யார் என்றால் எனது கணவரின் அத்தை மகனான சின்னசாமி ஆவார்.

மேற்கண்ட சின்னசாமி எனக்கு சித்தப்பா முறை வேண்டும் என்றால் சரிதான்.

நான் வழக்கிற்காக சின்னசாமி தவறாக நடந்துக்கொண்டதாக கூறிகிறேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியத்தை நான் சமூக நல பாதுகாப்பு அலுவலரிடம் கூறினேனா என்றால் ஞாபகமில்லை.

எனக்கும் ஒரு சரவணன் என்பவருக்கும் இடையே கள்ளதொடர்பு உள்ளதால் அதை மறைப்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் மீது ஒரு பொய்யான குற்றச்சாட்டை கூறிகிறேன் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் எனது அம்மா வீட்டு விசேசங்களுக்கு வரும்போது எனது தாய்

தந்தையரை ஏதாவது அசிங்கமாக பேசி அவமானப்படுத்தியுள்ளாரா என்றால் இல்லை.

நான் 1 ம் எதிர்மனுதாரருடன் ஒன்றாக வாழ்ந்த 4, 5 வருடத்தில் என்னை அடித்து பணம் நகை பெற்றுவர சொல்லி கூறினாரா என்றால் இல்லை, அதன் பிறகு கூறினார்.

4,5 வருடங்கள் வரை பணம் நகை வரதட்சனையாக கேட்டதில்லை அதன் பின்னிட்டு கேட்டார். ஆனால் தேதி வருடம் ஞாபகமில்லை.

யாரிடமும் பேச கூடாது என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபரை காட்டி அவரிடம் பேசவே பேசக்கூடாது என்றோ எனது கணவரான 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளாரா என்றால் சொன்னதில்லை.

2015, 2016 ம் ஆண்டிற்கு பிறகு சுமார் 2 வருட காலத்திற்கு என்னை யாரிடமும் பேசவிடவில்லை.

நான் மேற்கண்ட சாட்சியத்தை சமூகநல பாதுகாப்பு அதிகாரிகளிடம் கூறினேனா என்றால் கூறினேன்.

2019 ம் வருடம் மே மாதம் 1ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் என்னை அழைத்து சென்று எனது பெற்றோரின் வீட்டில் விட்டுவிட்டார்.

நான் 1ம் எதிர்மனுதாரருடன் வாழ்ந்து வந்த காலத்தில் பால் வியாபாரம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.

நாங்கள் பால் வியாபாரம் செய்துவந்த இடத்திற்கு அருகாமையில் ஒரு பெட்டிகடை இருந்தது என்றால் சரிதான்.

அந்த மேற்கண்ட பெட்டிக்கடைக்கு ஒரு சரவணன் என்பவர் அடிக்கடி கடைக்கு வந்ததால் என்னுடன் பழக்கம் ஏற்ப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் தனியாக ஒரு பெட்டிக்கடை வைத்திருந்தோம்.

எங்கள் கடைக்கு மேற்கண்ட சரவணன் வந்ததில்லை.

நான் சரவணன் என்பவருடன் பேச்சுவார்த்தையில் இருந்ததால் சின்னசாமி அதை தட்டிகேட்டார் என்றாலும், சின்னசாமி தட்டிகேட்டதால் சின்னசாமி என்னிடம் தவறாக நடந்துகொண்டார் என்று பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எதிர்மனுதாரர்களுடன் ஒன்றாக ஒரே வீட்டில் இருந்த காலத்தில் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு சாப்பாடு மற்றும் துணிமணிகள் போன்றவற்றை சரியாக செய்துவந்தார் என்றால் சரியல்ல. சாப்பாட்டு செலவுகளை எனது மாமனார்தான் பார்ப்பார்.

எனது மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர்கள் மூலமாக எனக்கு எந்த பிரச்சனைகளும் ஏற்பட்டவில்லை என்றால் சரிதான்.

என் வீட்டில் இருந்து எனது வீட்டார் எனக்கு கொடுக்கும் பொருட்களை வாங்ககூடாது என்றோ பயன்படுத்தகூடாது என்றோ 1ம் எதிர்மனுதாரர் தடுக்கவில்லை.

நான் வேலைக்கு எங்கு சென்றதே இல்லை. நான் வேலைக்கு செல்லாததால் வருமானம் எதுவும் ஈட்டவில்லை என்றால் சரிதான்.

எனது குழந்தைகள் எனது தாயாரின் வீட்டிற்கு வந்து 8 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான்.

குழந்தைகள் நான் 1ம் எதிர்மனுதாரருடன் வாழ்ந்த காலம் வரை என்னுடன் இருந்தார்கள் நான் 1ம் எதிர்மனுதாரரை பிரிந்தது முதல் இன்று வரை 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் தான் உள்ளார்கள்.

தற்சமயம் எனது மூத்தமகன் சிரஞ்சிவிக்கு 16 வயதாகிறது. எனது மகள் கீர்த்தனாவிற்கு 14 வயதாகிறது.

நான் எனது பிள்ளைகளை பார்ப்பதற்கு பெரியோர்கள் மூலமாக ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டேனா என்றால் மேற்கொண்டேன். எனது பிள்ளைகள் என்னிடம் பேசுவதில்லை என்றால் சரிதான். பயந்துக்கொண்டு பேச மறுக்கிறார்கள்.

நான் ஒழுக்கமற்றமுறையில் இருக்கும் காரணத்தினால்தான் பிள்ளைகள் என்னிடம் பேச மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல.

அரூர் சார்பு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதார் எனக்கு எதிராக விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி விவாகரத்து மனுவில் சரவணன் என்பவருக்கும் எனக்கும் தொடர்பு உள்ளதாக கூறிதான் 1ம் எதிர்மனுதார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

விவாகரத்து மனு 2018 ல் தாக்கல் செய்யப்பட்டு 2019 ல் வழக்கிற்கு எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் 2019 மே மாதம் வரை 1–ம் எதிர்மனுதாரருடன் தான் இருந்தேன். அதன் பின்னிட்டுதான் நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றேன்.

நான் மேற்கண்ட விவாகரத்து மனுவின் நகலின் அறிவிப்பை எனது தந்தை வீட்டில் இருக்கும்போது தான் பெற்றேன் என்றால் சரிதான்.

விவாகரத்து மனு தாக்கல் செய்ததன் பின்னிட்டு நான் அரூர் அனைத்து மகளிர் காவல்

நிலையத்தில் 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் அவர் குடும்பத்திற்கு எதிராக புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான்.

மேற்கண்ட புகாரில் நான் என்ன குறிப்பிட்டிருந்தேன் என்றால் 1–ம் எதிர்மனுதாரர் வீட்டிலிருந்த எனது பொருட்களை எல்லாம் தோட்டத்தில் கொண்டு வீசிவிட்டு எனது துணிமணிகளை எரித்தது சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தேன். ஆனால் துணி எரிக்கும்போது நான் பார்க்கவில்லை எனது பொருட்கள் மட்டும் அங்கு கிடந்தது.

மேற்கண்ட புகாரில் என்ன விசாரணை செய்து முடிவு செய்தார்கள் என்றால் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் நீதிமன்றத்தில் பிரச்சனையை தீர்த்து கொள்ள சொன்னார்கள்.

போலிஸார் நான்தான் மற்றொரு நபருடன் கள்ளத்தொடர்பில் உள்ளேன் என்று என்னை போலிஸார் எச்சரித்து அனுப்பினார்கள் என்றாலும் சரியல்ல.

நான் சொல்வது போல் 1–ம் எதிர்மனுதாரர் எனது பொருட்களை காட்டில் வீசவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

நான் 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக நீதிமன்றத்தின் மூலமாக ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் நான் தனியாக வழக்கு போடவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கில் கூறியுள்ளேன்.

1–ம் எதிர்மனுதாரரை சேர்த்து வைக்க கோரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் ஆனால் வழக்கு நிலுவையில் இருந்ததால் எனது புகாரை போலிஸார் எடுக்கவில்லை.

1–ம் எதிர்மனுதாரருக்கு வேறு ஒரு பெண்ணுடன் 2–வது திருமணம் நடைபெற்றதாக அருகில் இருந்த நபர்கள் கூறினார்கள்.

நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன் அந்த புகாரை பொம்மிடி காவல் நிலையத்தார் விசாரித்தார்கள் விசாரணையில் தான் நந்தினி என்ற பெண்ணை திருமணம் செய்யவில்லை என்றும், நந்தினி என்பவர் 1–ம் எதிர்மனுதாரர் வீட்டில் வேலை செய்யும் பெண் என்றும், 1–ம் எதிர்மனுதாரர் கூறினார்.

1–ம் எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து கொண்டதை என்னால் நிரூபிக்க முடியுமா என்றால் முடியும் நான் சம்பந்தப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் சாட்சியாக கொண்டு வருவேன்.

நான் சொல்வதுபோல் 1– ம் எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் திருமணம்

செய்யவில்லை என்றாலும் என் மீது இருக்கும் ஒழுக்கமற்ற செயல்களை மறைப்பதற்காக 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3–ம் எதிர்மனுதாரர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றாலும் 3–ம் எதிர்மனுதாரரை பார்த்து கொள்வதற்காக உறவுக்காரர் என்ற முறையில் தான் நந்தினி என்ற நபர் 1–ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தார் என்றாலும் சரியல்ல.

மேற்கண்ட நந்தினி 3 மாதம் தான் 1–ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இருந்தார்.

நந்தினி என்பவருக்கும் 1– எதிர்மனுதாரருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னிட்டு ஒரு வருட காலமாக எனது அம்மா வீட்டில் தான் இருந்தேன்.

நான் 8 வருடங்களாக 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் எனது பிள்ளைகள் மாமனார் மாமியார் ஆகியோர்களை பிரிந்து வாழ்ந்து வாழ்கிறேன்.

இந்த வழக்கை சமூக நல பாதுகாப்பு அலுவலரிடம் கொடுப்பதற்கு என்னுடன் யார்யார் வந்தார்கள் என்றால் எனது அப்பா அம்மா அத்தை ஆகியோர்கள் வந்தார்கள்.

நான் 2020 ம் ஆண்டு வாக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக சமூக நல பாதுகாப்பு அலுவலரிடம் புகார் கொடுத்தேன்.

வழக்கு பதிவு செய்தால் என் கணவர் என்னுடன் சேர்ந்து வாழ்வார் என்றும் மேலும் பயந்து கொண்டு என்னுடன் வந்து விடுவார் என்றும் நினைத்து வழக்கு கொடுத்தேன் ஆகையால் அவர் என்னை அடித்து கொடுமை செய்த விஷயங்களை எல்லாம் கூறாமல் விட்டுவிட்டேன்.

விவாகரத்து வழக்கில் எனது மகன் எனக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார் என்றால் சரிதான்.

இம்மனுவில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி உகந்தது அல்ல என்றாலும் 1–ம் எதிர்மனுதாரர் அவர்களிடமிருந்து எந்தவித பரிகாரங்களும் பெற நான் அருகதை அற்றவர் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**